[illegible]

([illegible] 5 [illegible] 1, [illegible] 1937)

JL
715m211,N33
N37.5.1
190349




"ஆரம்பக் கல்வி ஆபீ

94-95. புதுந் தெரு, மண்ணடி, மத்

## வி. குமாரசாமி நாயுடு & சன்ஸ்

புத்தக வியாபாரிகள்,

சின்னத்தம்பித் தெரு, மதராஸ்.

---

எலிமென்டரி பாடசாலைகளுக்கு

நவீன முறையில் எழுதிய பலவகைப்

பாட புத்தகங்களும், லைப்ரெரிக்குகந்த புத்தகங்களும்,

ஸ்டேஷனெரி வகைகளும்

ஆங்கிலத்திலும் 6" முதல் 9" அங்குல
குறுக்களவு கொண்ட குளோப்புகள்

மனித தேகப்படம்
தமிழ், தெலுங்கு, கன்னடத்திலும்
(செட் **7** வகைப் படங்கள்)

இயற்கை பொருட்படங்களும்
(செட் **47** படங்கள்)

இவ்விடம் கிடைக்கும்.

மதராஸ் யூனிவர்ஸிடி, அன்னமலை
யூனிவர்ஸிடிப் பதிப்புகளுக்கு
ஏஜென்டுகள்

---

இவர்களது

### ஃக்ஸ்டன் லிதோ ஒர்க்ஸில்

உயர்தர வேலைப்பாடுடன் எல்லா போஸ்டர்கள்
அச்சடிக்கப்படும்.



வருடச் சந்தா ரூ. 1. மலர் 5. இதழ் 1. [ஜூலை 1937


# ஆரம்பக்கல்வி
# ELEMENTARY EDUCATION


"ஆரம்பக் கல்வி"யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாசாந்திரப் பத்திரிகை.

EDITOR.
P. VEERARAGHAVAN (Member, Madras District Educational Council)


"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


24 NOV 1937


## நமது பத்திரிகை.

நமது இராஜதானியில் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கெனவும், ஆரம்ப ஆசிரியர்கள் முன்னேற்றத்திற்கெனவும், தோன்றிய பத்திரிகைகள் வெகு சில. அவைகளும் சில வருடங்கள் தலைகாட்டிய பிறகு மறைந்தன. தற்போது ஆரம்பாசிரியர்களுக்கென உலவிவரும் பத்திரிகைகள் நமது தமிழ் நாட்டில் வெகு சில. அவைகளில் நமது ஆரம்பக் கல்வி ஒன்று. கடந்த நான்கு வருடங்களாக பலவித கஷ்டங்களால் நடந்தேறிவருவது வாசகர்கள் அறிந்த விஷயம். சில சந்தா நேயர்கள் காலத்தில் சந்தாவை அனுப்பாமலிருப்பது ஒரு துன்பம், தபாலாபீஸ் அதிகாரிகள் காலத்தில் ரிஜிஸ்டர் நெம்பரை அனுப்பாமலிருப்பது மற்றொரு துன்பம். ஆனால் பல சந்தா நேயர்கள் நமது பத்திரிகை விஷயத்தில் பல குற்றங் குறைகளிருந்தும், பொருட்படுத்தாது, அவர்கள் சந்தாத் தொகையையும் அனுப்பி சில புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துக் கொடுத்து, இப்பத்திரிகையை எக்காரணத்தைக் கொண்டும் நின்றுவிடாமல் நடத்த எமக்கு அளித்த உதவிக்கு எமது மனமார்ந்த வந்தனத்தை அவர்களுக்கு அளிக்கின்றோம். 1937-ம் ஹு ஜூலை முதல் நமது பத்திரிகைக்கு 5-வது ஆண்டு பிறக்கின்றது. இதுவரையில் சந்தாக்களை காலத்தில் அனுப்பி ஆதரித்து வந்த பழைய சந்தா நேயர்கள் 5-வது வருடச் சந்தாவை சீக்கிரம் அனுப்பிவைத்து ஆதரிப்பதல்லாமல் இன்னும் அநேக சந்தா நேயர்களை சேர்த்தனுப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். 1936-ம் வருஷம் ஜூலை மாதம் முதற்கொண்டு 4-வது வருடத்திய சந்தா அனுப்பிய சந்தா நேயர்களுக்கு மாத்திரம் 5-வது வருடப் பத்திரிகை 1937-ம் ஹு ஜூலை முதற் கொண்டு அனுப்பிவைக்கப்படும். மற்றவர்களுக்கு பத்திரிகை நிறுத்திவிடப்படும் ஆதலின் பழைய சந்தா நேயர்கள் ரூ. 1. மணியார்டர் மூலம் பணம் அனுப்பினாலல்லாது 5-வது வருடப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

சந்தா அனுப்புபவர்கள் மணியார்டர் கூப்பனில் பழைய சந்தாதாரராயிருந்தால், சந்தா நெம்பரும், அல்லது பழைய சந்தாதாரரென்றும், புதிய சந்தாதாரராயிருந்தால் புதிய சந்தாதாரரென்றும், குறித்தனுப்பவும்.

190349
சென்னை 600 008

# கல்வி டைரக்டரின் கவனமற்ற கருத்து.

(P. பரிமணப்பல்லவராயர்)

ஜனசக்தி யின் 13-8-37 தலையங்கத்தின் பதிலே தக்க பதிலாகும். கல்வி டைரக்டரின் இந்த அபிப்பிராயம் பொருத்தமானதல்ல என்று கூறுவது மட்டும் போதாது. கவனமற்ற கருத்து என்றுங்கூட மிக மிக அழுத்தமாகவும் திருத்தமாகவும் கூறப்படவேண்டியதாகும். எங்ஙனமெனில்,

1. "தினசரி வாழ்வுக்கும் திகைக்கும் நிலையில் மனோசாந்தியின்றிப் போதிப்பது எதிர்பார்க்கத்தக்கது அன்று."

(ஆரம்பக் கல்வி)

2. "வயிற்றில் பசியும், வாயில் போதனையும் கொண்டுள்ள ஆசிரியர்களிடம் மாணவர்களின் மனோவிருத்திக்கு எத்தனை இயைந்திருக்கும்"

(ஆரம்பக் கல்வி)

3. "ஆசிரியர்கள் ஜன சமூகத் தொண்டர்களென்ற நிலைபோய் சமூக அனுதைகளாகப் பாவிக்கப்படுகின்றனர்."

(பாலர் கல்வி)

4. "ஆசிரியர்கள் இந்த தேசத்தில் கூலியாட்களைப் போல் நடத்தப்படுவதா தொழில் அபிவிருத்தி மனப்பான்மை உடையவராகவுமில்லை".

(பாலர் கல்வி)

5. இந்நாட்டு ஆரம்பாசிரியர் சம்பளம் அந்தஸ்து என்ன? மேல் நாட்டு ஆரம்பாசிரியர் சம்பளம் அந்தஸ்து என்ன?

6. சமீபத்தில் குறைக்கப்பட்ட சம்பளம் பழைய ஆசிரியர்களை எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாதென்று கல்வி மந்திரியாயிருந்த குமார ராஜா முத்தையா செட்டியாரவர்களால் பகிரங்கமாகச் சட்டசபைக் கூட்டத்தில் கூறப்பட்ட வாக்கு காப்பாற்றப்பட்டதா?

7. செகெண்டரி ஆசிரியர்களுக்கு மட்டும் குறைக்கப்பட்ட சம்பளம் திருப்பிக்கொடுக்கப்பட்ட காரணம் ஆரம்பக் கல்விக்கும் அதனாசிரியர்க்கும் இழைக்கப்பட்ட அநீதியல்லவா?

8. லோயர் கிரேடினர் ஹையர் கிரேடு பரீட்சை யெழுதிப் பாஸ் செய்து விட்டால் ஹையர் கிரேடாகத் திருத்தித் தரப்படுமென்ற தற்போதைய புதிய ஜீ. ஓ. வின்படி 1907 முதல் 1914 முடிய ஹையர் கிரேடு படித்த பாடங்களையே படித்தும், ஹையர் கிரேடினர் எழுதிய பரீட்சையையே எழுதியும், ஹையர் கிரேடினர்க்குமேல் அதிகமான மார்க்குகள் வாங்கியும், ஹையர் கிரேடினர்களைப்போலவே வித்தியாசமில்லாமல் "எலிமெண்டரி கிரேடு" என்ற ஒரே விதமான சர்ட்டிபிகேட்டுகளைப் பெற்றுள்ள லோயர் குவாலிபிகேஷன் ஆசிரியர்களின் பரீட்சை யாதொரு வித்தியாசமில்லையென்று பரீட்சைக் கமிஷனரின் காரியதரிசியவர்களே கூறியுமிருக்க, இந்தக் குறிப்பிட்ட வருஷங்களில் பயின்ற ஆசிரியர்களுக்கு (பரீட்சை யெழுதாமலே - பரீட்சை விலக்கு புதிய ஜீ. ஓ. வின்படி செய்து) இவர்களின் சர்ட்டிபிகேட்டைத் திருத்தித் தரலாமென்னும் நியாயம், மந்திரியாயிருந்த ரெட்டியாருக்கும், டிப்டி டைரக்டரான ரெட்டியாருக்கும் வேனேயாருக்கும் தோன்றி ஒப்புக்கொண்டுமிருக்க, மனம் வாராததும்-அலட்சியம் செய்யப்படுவதும் நியாயமா? என்றும், இது ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்குச் செய்யும் செயலா என்றும் கேட்கின்றோம்.

9. கட்டாயக் கல்வி முறையாலெல்லாம் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியாகவில்லையென்று கனம் டைரக்டரவர்களே சமீபத்தில் கூறியிருக்கும் போது, பொதுஜனங்களாகிய பெற்றோர்களுடையவும் மற்றோர்களுடையவும் ஒத்துழைப்பின்றி ஒத்துழைப்பைச் சர்க்கார் உண்டு பண்ணிக் கொடுக்காமல், ஆரம்பாசிரியர்களை மட்டும் குறை கூறுவது நியாயமன்று என்பதை இன்னும் தெரிந்து கொள்ளாமலிருப்பதும் பெரிதும் வருந்தக் கூடியதன்றோ! தெரிந்து கொண்டிருந்தால் - நினைவு கொண்டிருந்தால் இவ்விதம் கூறமாட்டார்கள்.

இவ்வகையிலெல்லாம் ஆரம்பாசிரியர்களுக்கு அநீதிபுரிந்து விட்டு ஆரம்பாசிரியர்கள் மீது வீண் பழி சுமத்துவது கல்வி யிலாகா டைரக்டரின் மீசுரமான கவனமா, கவனமற்ற கருத்தா என்கிறோம்?

எனவே, இக் குறைகளை நமது காங்கிரஸ் (கல்வி) மந்திரிகளாவது அகற்றி ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கு ஆரம்பாசிரியர்கள் உண்மையாய் உழைக்கக் கூடிய வசதிகளையும், மனோபாவங்களையும், சக்திகளையும், ஊக்கங்களையும் உதவியருளுமாறுபெரிதும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

# செய்திகளும் குறிப்புகளும்.

"சில பத்திரிகைகளில் ஜில்லாக் கல்விச்சபைகளை எடுத்துவிடும் விஷயத்தை காங்கிரஸ் மந்திரிகள் ஏறக்குறைய ஒத்துக்கொண்டதாக காணப்பட்டன. தீர விசாரித்ததில் அவ்விதம் ஒன்றும் கல்வி மந்திரியார் முடிவு செய்யவில்லையென்றும், கூடிய சீக்கிரத்தில் கனம் கல்வி மந்திரியும், அவரது காரியதரிசியாகிய வர்க்கி அவர்களும், பிரதி ஜில்லாவிற்குச் சென்று, டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்கள், கல்விச் சபைத் தலைவர்கள், ஆசிரிய மானேஜர்கள், பாடசாலைத் தலைவர்கள் இவர்களை ஒன்றுகூட்டி அலோசித்த பிறகு தான். ஒரு முடிவுக்கு வருவார்களென்று விளம்பர இலாகா மந்திரி தெரிவித்திருக்கிறார்".

## கல்வி மந்திரி பேட்டி

சென்னையிலிருந்து, திரு. கெ. இராமாநுஜம் பிள்ளை, பி. வீரராகவன், என். எ. நடேச முதலியார், டி. இ. வரதாச்சாரியார், அவர்களும், வட ஆற்காட்டிலிருந்து திரு. கெ. இரங்கைய்ய ராஜு அவர்களும், சித்தூரிலிருந்து, திரு, புல்லய்யா செட்டி அவர்களும், தஞ்சாவூரிலிருந்து திரு. டி. வ. சுவாமிநாத ரூவ், திரு. கெ. ரங்கசாமி ஐய்யங்கார் அவர்களும், கும்பகோணத்திலிருந்து திரு. இராஜகோபாலன் அவர்களும், சேலத்திலிருந்து திரு. இராமசாமி ஐயர் அவர்களும், நாமக்கல், வரதய்யா அவர்களும், எஸ். ரகுநாதன் அவர்களும், கல்வி மந்திரியை பேட்டிக்கண்டார்கள். கல்வி மந்திரியார் எல்லாக் குறைகளையும், நன்றாக யோசித்து அவரால் கூடுமான உதவியை செய்வதாக வாக்களித்தார்.

* * *

கல்வி யிலாகா டைரக்டர் திரு. ஸ்டாத்தம் துரையவர்கள் கல்வி மந்திரியினிடத்தில் தனக்குள்ள செல்வாக்கைக் கொண்டு கல்விச் சபைகளை ஒழிப்பதற்கு முயன்று வருவதாக ஓர் வதந்தி. அது நம்பத்தகுந்ததல்ல, காங்கிரஸ் மந்திரிகளின் கொள்கை அதிகார வர்க்கத்தினரிடத்திலிருந்து அதிகாரத்தை பொதுமக்களிடத்தில் கொடுக்க வேண்டுமென்பதாகையால், கல்வி யிலாகா அதிகாரத்தை பொதுமக்களாலும், ஆசிரிய மானேஜர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் அடங்கிய கல்விச் சபைகளை புறக்கணித்து, மறுபடியும் கல்வி யிலாகா அதிகாரிகளிடம் காங்கிரஸ் மந்திரிகள் கொடுக்க மாட்டார்கள்.

* * *

கல்விச் சபைகளை ஒழிக்கவேண்டுமென்பது பொதுமக்களின் அபிப்பிராயமல்ல. அவைகளை சீர்திருத்த வேண்டு மென்பதே பொதுமக்களின் அபிப்பிராயம். கல்விச் சபைகளில் அதிகமாக ஆசிரியர்களும், ஆசிரிய மானேஜர்களும், கல்வி நிபுணர்களும், கல்வி அநுபவமுள்ளவர்களும் இல்லாததே முதற் குறை. இரண்டாவது திரு. குமாரசாமி ரெட்டியார் காலத்தில் கல்விச் சபை செய்யும் தீர்மானங்களை யெல்லாம் டைரக்டர் கேள்வி கேட்க இடம் கொடுத்தது இரண்டாவது குறை.

"ஒவ்வொருபாடசாலை ஆசிரிய மானேஜரும், ஆசிரியரும் கதர் உடுத்த வேண்டும், அந்தந்த கிராமத்திலுள்ள காங்கிரஸ் கமிட்டிகளில் அங்கத்தினர்களாகவேண்டும். சத்தியாக்கிரகம், செய்ய தெரிந்துகொள்ளவேண்டும், ஆசிரியர்களின் குறைகள் தீர சிறைக்குச் செல்லவும் தயாராகவேண்டும், கூடுமானல் உடல், பொருள் ஆவியையும் விட தயாராக இருக்க வேண்டும். இல்லையேல் ஆசிரியர்கள் முன்னேற வழி கிடையாது, இவைகளையெல்லாம் நமக்கு காங்கிரஸ் காரர்கள் காண்பித்திருக்கின்றார்கள்."

திரு. இராமசாமி ஐயர், ஆசிரியமானேஜர் சங்கத் தலைவர், சேலம்.

* * *

"காங்கிரஸ் காரர்கள் ஆட்சி புரியுங்காலத்திலாவது ஆசிரியர்களும், ஆசிரிய மானேஜர்களும், தைரியமாக சில டிப்டி இன்ஸ்பெக்டர்கள் செய்யும் அட்டூழியங்களை கல்வி அதிகாரிகளின் பார்வைக்கும், கல்வியதிகாரிகள் செய்யும் அநீதியற்றச் செயல்களை டைரக்டரிடமும், டைரக்டர் செய்யும், கெடுதல்கள் ஏதாவது இருப்பின், கனம் கல்வி மந்திரியின் பார்வைக்கும், கனம் மந்திரியாரும் அதை கவனிக்காவிடின் சட்ட சபை காங்கிரஸ் அங்கத்தினர்களிடத்திலும், அவர்களும் கவனிக்காவிடில் பொதுக் கூட்டங்கள் கூட்டி ஓட்டுக் கொடுத்த பொதுமக்களிடத்திலும் எடுத்துக்காட்ட முன்வரவேண்டும்."

இராமநாதன், ஈரோட்

* * *

இன்று துருக்கியை ஆண்டு வரும் கமால் பாஷா ஒரு கிராம ஆசிரியன் என்பதைத் தெரிவிக்கின்றேன். இன்னும் மேல் நாட்டில் பல தேசங்களை ஆண்டு வரும் பல பொதுஜனத் தலைவர்கள் ஆசிரியர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றேன். ஆசிரியர்களே எழுந்திருங்கள், ஒரு காலத்தில் இவ்விந்தியா தேசத்தையே, பல ஆசிரியர்கள் தான் ஆளப்போகின்றார்கள். நாம் அடிமைகளல்ல, நம் கோழைத்தனம் நம்மை அடிமையாக்குகின்றது, நம்மிடத்திலுள்ள சுய நலம் நம்மை அழுத்துகின்றது.

ஆரம்பாசிரியன், வடசேரி.

ஆசிரிய மானேஜர்களே டிப்டி இன்ஸ்பெக்டர்கள் நமது விரோதிகளல்ல, நம்முடைய சகோதரர்கள். அவர்கள் நமது எஜமானர்களல்ல நம்மைப் போன்ற பொதுஜன ஊழியர்கள். அவர்களும் மாதம் 100 ரூபாயாக வருடத்தில் 1200 ரூபாய் கிராண்டாக ஏழை வியவசாய மக்களின் வரி பணத்தைத்தான் பங்கிட்டு கொள்ளுகிறார்கள். நாமும் வருடம் ரூ. 1000, 2000 ஆக அதே ஏழை வியவசாயிகளின் வரிப் பணத்தைத்தான் பங்கிட்டுக்கொள்ளுகிறோம். பண விஷயத்தில் அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் கிடையாது, ஆசிரிய மானேஜர்களும், எய்டட் பாடசாலைகளும் குறையக் குறைய டிப்டி இன்ஸ்பெக்டர்களும் ஒருவர் பின் ஒருவராக வீட்டிற்குப் போக வேண்டியதே. ஆதலின் டிப்டி இன்ஸ்பெக்டர்களின் முன்னேற்றமும், எய்டெட் பாடசாலைகளின் அபிவிருத்தியிலிருக்கிறது. ஜில்லா போர்ட்டு, முனிசிபல் பாடசாலைகளில் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்குச் செல்வாக்குக் கிடையாது. இக் கல்வியதிகாரிகளுக்கு இருக்கும் செல்வாக்கெல்லாம், எய்டட் பாடசாலைகளில் தான். கல்வியதிகாரிகள் பாடசாலை மானேஜர்களுடன் ஒத்துழைப்பார்களாக.

முருகேசன், திருச்சி

* * *

1937ஹு அக்டோபர் 2-ம் தேதி சென்னையில், சென்னை மாகாண கல்விச் சபை அங்கத்தினர்கள் மகாநாடு ஒன்று கூடும். அதற்கு சட்ட சபை உபத்தலைவரும், செங்கல்பட்டு ஜில்லாக் கல்விச் சபை தலைவருமான, திரு. கெ. வெங்கடசாமி நாயுடு தலைமை வகிப்பார். திரு. கெ. இரங்க ராமாநுஜம் (சென்னைக் கல்விச் சபை உபத் தலைவர்) வரவேற்புக் கமிட்டித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * *

திரு. A. R. சேஷாசலம் செட்டியார், 18-9-37-ல் நடந்த ஆசிரியர்கள் அல்லாத பாடசாலை மானேஜர்கள் சங்கத்தின் கூட்டத்தில், சென்னை ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.



உபாத்தியாயர்களின் சர்ட்டிபிகேட்டுகள் ஒரு பாடசாலையின் வருடாந்திர பரிட்சை முடிந்த 15 தினங்களுக்குள் காட்டப்படவேண்டுமென்றும், அவ்விதம் தவறினல் சர்ட்டிபிகேட் காட்டப்படாத உபாத்தியாயருக்கு கிராண்ட்டு கிடைக்கப்படமாட்டாதென்று அரசாங்கத்தார் ஜி. ஓ. நெ. 1498 [8-7-37] உத்தாவிட்டிருக்கின்றனர்.

* * *

காங்கிரஸ் பார்லிமென்டரி கட்சியின் கல்விக் கமிட்டியின் கூட்டம் 17-9-37-ல் சென்னையில் திரு. வர்க்கியின் தலைமையில் கூடிற்று.

* * *

சர்க்கார் ஊழிய வர்க்கத்திலுள்ளவர்களிடை உள்ள லஞ்சம் வாங்குவது போன்ற ஒழுங்கீனங்களைப் போக்குவதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் நியமிக்கப்படுவார். அதற்காக 10000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மண புரி.

* * *

மகாத்மா காந்தியவர்கள் ஒவ்வொரு பாடசாலையும் அதிகமாக அரசாங்கத்தின் கிராண்டை எதிர்பார்க்கக் கூடாது. கூடுமான வரையில் அந்தந்த கிராமத்தாரின் பொருள் உதவியாலும், சிற்சில குடிசைத் தொழில்களின் வருமானத்தைக் கொண்டும், பாடசாலைகள் நடத்தப்படவேண்டுமென்று ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

* * *

இந்த வருடம் எய்டட் பாடசாலைகளுக்கு கிராண்டுத் தொகை 59 லக்ஷத்திலிருந்து 61 லக்ஷமாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சென்ற வருடம் ஹையர் கிரேட்டுக்கு 1 ரூபாயும், செகண்டரி கிரேட்டுக்கு 1 ரூபாயும் உயர்த்திக் கொடுத்தது போல் இந்த வருடம் கிடையாது. ஹையர் கிரேட்டுக்கு வருடம் 156 ரூபாயும் செகண்டரி கிரேட்டுக்கு ரூபாய் 212 மாக இவ்வருடம் கொடுக்கப்படும்.

---

கனம் கல்வி மந்திரி திரு. டாக்டர் சுப்பராயன் அவர்கள், இந்த மாதம் [18-9-37] ந்தேதி லண்டனுக்கு வியாபார ஒப்பந்தக் கமிட்டிக்கு போக ஏற்பாடு செய்யப்பட்டபடி போகவில்லை. ஆதலின் அவர் லண்டன் பிரயாணம் நின்றுவிட்டது.

---

கனம் பிரதம மந்திரி திரு. ஸி. இராஜகோபாலாச்சாரியர், சென்னை கார்ப்பரேஷன் உபாத்தியாயர்கள் மகா நாட்டில், இன்ஸ்பெக்டர்கள் அதிகப்படுத்தினல் தான் ஆரம்பக் கல்வி விருத்தியாகுமென்றும், ஆரம்ப ஆசிரியர்கள் நன்றாக வேலை செய்வார்களென்றும், சொல்லுவதில் எனக்கு நம்பிக்கையில்லையென்று தெரிவித்தார். ஆனல் ஆசிரியர்கள் தங்கள் பொருப்பை நன்றாக உணர்ந்து நமது நாட்டில் சீக்கிரம் பாமர நோய் ஒழியும்படி வேலை செய்யவேண்டுமென்று தெரிவித்தார்.

---

இந்த வருடம் அட்வான்ஸ் கிராண்ட்டு, 4-வது வகுப்பு 5-வது வகுப்புக்களில் முதல் வகுப்பிலுள்ள பிள்ளைகளில் 100-க்கு 25வீதம் இருக்கும் பாடசாலைகளுக்கும், 3-வது வகுப்புக்கள் வரையுள்ள பாடசாலைகள் (*Feeder Schools*) 3-வது வகுப்பிற்குப் பிறகு அந்தப் பிள்ளைகளை அடுத்த 5-வது வகுப்பு பாடசாலைகளுக்கு அனுப்பும் பாடசாலைகளுக்குந்தான் 6 மாதத்திய கிராண்டு கொடுக்கவேண்டுமென்று ஒரு புதிய அரசாங்க உத்திரவு கல்விச் சபைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

---

திரு. வர்க்கியவர்கள், கள்ளிக் கோட்டைக்கும், கோயம்பத்தூருக்கும் சென்று, கல்விச் சீர்திருத்தத்தைப்பற்றி மகா நாடுகளைக் கூட்டி அபிப்பிராயம் கேட்டதில், தற்போதைய கல்விச் சபைகளை எடுத்துவிட்டு, வேறு விதமாக கல்விச் சபைகளை திருத்தவேண்டுமென அபிப்பிராயம் கூறினர்களே யொழிய, கல்விச் சபைகளையே ஒழித்துவிட்டு, ஆரம்பப் பாடசாலைகளை, கல்வியதிகாரிகளின் ஆதிக்கத்தில் ஒப்படைக்கவேண்டுமென்று எவரும் சொல்லவில்லை.

# அரக்கோணம் ரேஞ்சு
# ஆரம்ப ஆசிரிய மானேஜர்களின் சங்கம்

இச் சங்கத்தின் அவசரக் கூட்ட மொன்று 1937௵ ஆகஸ்டு௴ 22௳ பிற்பகல் 2 மணிக்கு ஹிந்து உயர்தர ஆரம்பப் பாடசாலைக் கட்டிடத்தில் ௸ சங்கத் தலைவர் திரு. K. இரங்கையராஜு அவர்களின் தலைமையின் கீழ்க் கூடிற்று. அச்சமயம் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறை வேற்றப்பட்டன:-

1. இத்தனை வருடங்களாகப் பல தியாகங்கள் செய்து கடைசியில் தற்போது மந்திரிப் பதவியைக் காங்கிரஸ்காரர்கள் ஏற்றது பற்றியும், அதிலும் நமக்குப் பழைய கல்வி மந்திரியாகிய கனம். டாக்டர். சுப்பராயன் அவர்களை மறுபடியும் கல்வி மந்திரியாக ஏற்படுத்தப்பட்டது பற்றியும், இச்சங்கம் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறது.

2. நமது நாட்டின் கல்வி முறையானது இயற்கை வளத்துக்கு மாறுபட்ட முறையில் போதிக்கப்பட்டு, அதனால் மக்கள் வாழ்வு பல வழியிலும் பாழ்படுவதால் அதனை மாற்றி நமது நாட்டு அனுபவ முடையதாகச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

3. இச் சங்கம் ஆரம்ப ஆசிரிய மானேஜர்களுக்கு மாகாண சட்ட சபையில் தனித் தொகுதி ஒன்று வேண்டும் என்றும், அத்தொகுதிக்கு ஆரம்ப ஆசிரிய மானேஜர்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

4. ஜனநாயக ஆட்சி வேண்டும் என்று மக்கள் போராடு மிக் காலத்தில் நம் தாய் நாட்டுக் கல்வி யபிவிருத்திக்கு அடிப்படையாய் உள்ள ஆசிரியருக்கும், ஆசிரிய மானேஜர்களுக்கும், அறிஞர்களுக்கும்; கல்வியதிகாரிகளின் மனப்போக்கையும் பொதுஜன அபிப்பிராயங்களையும் நாட்டின் கல்வி நிலையையும், யோசிப்பதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கல்விச் சபை இருக்கவேண்டியது அவசியம் என்றும், ஆனால் அவைகள் தற்போதைப்போலல்லாது, திருத்தியமைக்கப்படல் வேண்டும் என்றும், 100 பாடசாலைகளுக்கு ஒரு சங்கங்களின் மூலமாக ஆரம்ப ஆசிரியரும், ஒரு ஆசிரிய மானேஜரும், கல்விச் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், தாலுக்கா வாரியாக ஒரு போர்டு அங்கத்தினர் சேர்க்கவேண்டும் என்றும், இன்னும் சில கல்வி அறிஞர்களைக் சேர்க்கப் படவேண்டும் என்றும், தற்போதைய நியமிக்கும் பழக்கம் ஒழிய வேண்டும் என்றும், கல்விச் சபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கும் பிரயாணச் செலவு குறைக்கப்பட வேண்டும் என்றும், கல்விச் சபைகள் அரசாங்கத்தின் முழு ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் என்றும், அவைகள் செய்யும் தீர்மானங்கட்குக் கல்வி மந்திரி தவிர கல்வி இலாகா அதிகாரிகள் தலையிடலாகாது என்றும், இவ்வித சீர்திருத்தம் செய்தால் தான் ஆசிரியர்களுக்கு உண்மையில் சுதந்திரம் அளித்ததாகும் என்று இச் சங்கம் தீர்மானிக்கிறது:-

5. ஜஸ்டிஸ் கட்சியின் கடைசி காலத்தில் ஏறக்குறைய 1000 ரூ. மாதச் சம்பளமுள்ள 4 டிவிஷனல் இனிஸ்பெக்டர்களையும் சுமார் 60 70 ஜூனியர் டெப்யூடி இனிஸ்பெக்டர்களையும் கல்வி இலாகா அதிகாரிகள், அனாவசியமாக ஏற்பாடு செய்து கொண்டதை காங்கிரஸ் மந்திரிகள் உடனே கவனித்து அனாவசியச் சிப்பந்திகளை நீக்கி ஏறக்குறைய ஒரு லக்ஷம் ரூபாய் மிச்சம் பிடிக்கும்படியாய் இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

6. 1937ம்௵ ஜூலை மாதம் 21௳ கோயம்பத்தூரில் நடந்த ஆரம்ப ஆசிரிய மகா நாட்டில் டைரக்டர் திரு. ஸ்டாத்தம் துரையவர்கள் ஆரம்பக் கல்வி தற்போதைய சீர்கேடான நிலைமைக்கு ஆரம்ப ஆசிரியர்கள் தான் முக்கியக் காரணம் என்று எதிர்ப்பாராத ஆசிரியர்களின் மேல் ஏற்படுத்திய குற்றச் சாட்டைக்



ஹிந்து, சுதேச மித்திரன், முதலிய பத்திரிகைகள் டைரக்டர் சொற்பொழிவை தத்தம், தலையங்கங்களில் கண்டித்து எழுதியதற்கு இச் சங்கம் அன்னவர்கட்கு மிகவும் நன்றி பாராட்டுகிறது.

7. கட்டாயக் கல்வி முறையை அமுல் இல்லாத இடங்களில் உள்ள எயிடெட் பாடசாலைகளில், புதிய சீர்திருத்தப்படி, ரிகார்டு சீட்டை வைக்கும்படி, டெப்யூடி இனிஸ்பெக்டர்கள், வற்புறுத்துவதைக் கல்வி மந்திரியவர்கள் கண்டிக்கும்படியாக இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

8. சென்ற வருடம் ஹையர் கிரேட் உபாத்தியாயர்களுக்கு 1 ரூபாயும் ஸெகண்டரி கிரேட் உபாத்தியாயர்களுக்கு 1 ரூபாயும் கிராண்டு அதிகம் கொடுத்தபடி இவ் வருஷமும் கொடுக்கும்படி இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

9. 3-ல் 2 பங்குக்கு மேல் அதிகப்படியாகக் கிராமாந்தரங்களில் வைக்கப்பட்டிருக்கும் திறமையற்ற உபாத்தியாயர்களுக்கும் தற்போது கால நிலையை அனுசரித்துக் கிராண்டு கொடுக்கப்படவேண்டும் என்றும் இச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

10. 4-வது 5-வது வகுப்புகளில் 100-க்கு 25 பிள்ளைகளுக்குக் குறைந்தால் அஸெஸ்டு கிராண்டில் 100-க்கு ரூபாய் 10-ம் 15-ம் பிடிக்கும்படிப் புதிய திட்டத்தில் கண்டிருப்பதை, நாம் முதல் வகுப்பில் அநேக பிள்ளைகளைச் சேர்க்க இடங்கொடாததினாலும், இது ஆரம்பக் கல்விக்கு ஒரு தடையாய் இருப்பதினாலும் அதனை எடுத்துவிடுமாறு இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

11. கிராண்டுக்காக ஒரு உபாத்தியாயருக்கு 20 பிள்ளைகளுக்குக் குறையாமல் ஆஜராக வேணும் என்னும் விதியை 15 என்று திருத்தும்படியாகக் கேட்டுக்கொள்கிறது.

12. லக்ஷக்கணக்காகப் பொது மக்களின் பணத்தை அபார செலவு செய்துவரும் போர்டு பாடசாலை களிலேயே ஒரு பிள்ளைக்கு $9\frac{1}{2}$ சதுர அடி இடம் காட்ட முடியாதென்றால், ஒரு தம்படியும் குடிக் கூலி கொடுக்காமல் அஸெஸ்டு கிராண்டுக்கே லாட்டரி போடும் எயிடெட் பாடசாலைகளில் ௸ விகிதாசாரம் காட்ட முடியாதாகையால் ௸ விதியை 6 சதுர அடியாகத் திருத்தும்படி இச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

13. அண்டிரேய்ண்டு லோயர் கிரேட் உபாத்தியாயர்கள் கூடிய வரையிலும் 10 வருஷம் வேலை செய்திருந்தாலும், காலக் கிரமத்தில் எடுத்துவிடப்படும் என்னும் விதியை மாற்றிக் கிராமாந்திரங்களில் யோக்கியதாம்சம் உள்ளவர்களை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

14. இந்த ரேஞ்சில் இன்னும் சில பாடசாலைகளுக்குச் சென்ற வருடத்திய கிராண்டு இன்னும் அளிக்காமல் இருப்பதுபற்றி விசனிப்பதுடன், கல்வி அதிகாரிகள் ௸ கிராண்டைச் சீக்கிரத்தில் கொடுக்கும்படியான வழியை உத்திரவு பிறப்பிக்குமாறு கனம். கல்வி மந்திரியவர்களைச் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

15. 200 பிள்ளைகளுக்குமேல் உள்ள பாடசாலைகளுக்குப் பிரத்தியேகமாக ஒரு உபாத்தியாயர் அனுமதிக்குமாறு கல்வி யதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறது.

16. ஹிந்து பள்ளிக் கூடங்கள் இருக்கும் இடங்களில் மிஷன் பள்ளிக் கூடங்கள் ஏற்பட்டு இந்து பள்ளிக் கூடங்களைப் பாதிப்பதால் ௸ மிஷன் பள்ளிக் கூடங்களுக்கு தகுந்தபடி உத்திரவு அளிக்கும்படி இச் சங்கம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

17. தற்போது எயிடெட் பள்ளிக் கூடங்களில் ஆதிதிராவிட பிள்ளைகள் சேர்ந்து படித்தால் தான், கிராண்டு கொடுக்கப்படும் என்னும் விதியானது. லேபர் பள்ளிக் கூடங்கள் சேரியில் வைக்கப்பட்டும் வைப்பதினாலும், பாதிக்கப்படுவதினால் இனிமேல் இந்து எயிடெட் ஸ்கூல் இருக்கும் இடங்களில் லேபர் ஸ்கூல்கள்

வைக்க அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறது.

18. திடீரென பாடசாலைகளில் 5 வகுப்புகளும் ஏற்படாததால் வருஷாவாரியில் ஒவ்வொரு வகுப்பாக 5 வகுப்பு வரையிலும் வைக்க, அனுமதிக்கும்படி புதிய திட்டத்தைத் திருத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

19. கிராண்டுத் தொகை நிர்ணயிப்பதில் தற்போது டெப்யூடி இனிஸ்பெக்டர்கள் அவர்களுக்கு இருந்துவரும் சர்வாதிகாரத்தையும் கல்விச் சபைக்கே இருந்து வருமாறு சட்டமமைக்க கனம். கல்வி மந்திரியை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

20. மேல்கண்ட தீர்மானங்களை மாகாண கல்வி மந்திரியவர்களுக்கு கனம். டைரக்டர் துரையவர்களுக்கும், டிவிஷனல் இனிஸ்பெக்டர் அவர்களுக்கும், ஜில்லாக் கல்விச் சபைத் தலைவர் அவர்களுக்கும், ரேஞ்சு டெப்யூடி இனிஸ்பெக்டர் அவர்களுக்கும், மாகாண ஆரம்ப ஆசிரிய சங்கக் காரியதரிசி அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளும்படி இச் சங்கத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறது.

—❀—

### போதனமுறை பாடசாலையில் கதர்

சர்க்கார் உத்தியோகஸ்தர் தரிக்கவேண்டிய உடை சம்பந்தமாக விடுத்த உத்திரவின் காரணமாக கடலூர் சர்க்கார் போதனமுறை பாடசாலை மாணவர்கள் சுமார் 160-பேர்கள் இன்று ஒரு உள் சட்டையுடனும் மேல் தோவத்தியுடன் பாடசாலையில் ஆஜரானார்கள். இம்மாதிரி மாணவர்கள் ஒற்றுமையாக ஒரு வழியை அநுஷ்டித்ததைப் பார்த்து தலைமை உபாத்தியாயர் அவர்களைக் கூப்பிட்டு எல்லோரும் ஒற்றுமையாக இம்மாதிரி உடைதாரிருக்க வேணுமென்று தெரிவித்தால் தான் மேல் அதிகாரிகளுக்கு எழுதி உத்திரவு வாங்குவதாகச் சொன்னார். இது விஷயத்தில் ஊரில் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினால் தேக சுகத்தைக் கெடுத்துக்கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனாக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையேல் உபயோகித்து உடனே தேக அசதி, மலச்சிக்கல் நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபக குறைவு, தாது புஷ்டியின்மைமுதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0

இனாம்! காம சாஸ்திரம் இனாம்!!

விலாசத்தை தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, : : : : மதராஸ்

## கலம்பகம்.

### சட்ட சபையினர் சம்பளம்

1937 அக்டோபர் 1-ந்தேதியிலிருந்து பிரதம மந்திரிக்கும் இதர மந்திரிகளுக்கும் மாதமொன்றுக்கு 500 ரூபாய் வீதம் சம்பளமும் வீட்டு வாடகை அலவன்ஸ் 100 ரூபாயும் வாகன அலவன்ஸ் 150 ரூபாயும் கொடுக்கப்படும்.

பிரதிநிதி சபைத் தலைவருக்கு மாதமொன்றுக்கு 500 ரூபாய் சம்பளமும் வீட்டுவாடகை அலவன்ஸ் 100 ரூபாயும், வாகன அலவன்ஸ் 150 ரூபாயும் கொடுக்கப்படும். பிரதிநிதி சபை டிப்டி தலைவருக்கு மாதமொன்றுக்கு 150 ரூபாய் சம்பளமும் கொடுக்கப்படும்.

ராஜாங்கசபைத் தலைவருக்கு 250 ரூபாய் சம்பளமும், வீட்டு வாடகை அலவன்ஸ் 100 ரூபாயும், வாகன அலவன்ஸ் 150 ரூபாயும் கொடுக்கப்படும். ராஜாங்கசபை உபதலைவருக்கு 150 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு பார்லிமெண்டரி காரியதரிசிக்கு மாதம் 250 ரூபாய் சம்பளமும், வீட்டு, வாகன அலவன்ஸ் மொத்தமாக 150 ரூபாயும் கொடுக்கப்படும்.

மந்திரிகள் பிரதிநிதி சபைத் தலைவர் முதலியோரின் உபயோகத்திற்கு அவ்வப்போது மாகாண கவர்ன்மெண்டார் தகுந்த வாகனங்களை விலைக்கு வாங்கி அளிப்பார்கள்.

பார்லிமெண்டரி காரியதரிசி உத்தியோகத்தை வகிப்பதாலும் அவ்வுத்தியோகத்திற்குச் சம்பளத்தைப் பெறுவதாலும் எவரும் பிரதிநிதி சபை அல்லது ராஜாங்கசபை மெம்பராக இருப்பதற்குத் தடையில்லை.

எந்த உத்தியோகத்தையும் வகிக்காத பிரதிநிதி சபை ராஜாங்கசபைமெம்பர் ஒவ்வொருவருக்கும் மாதம் 75 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படும். பிரயாண தினசரி அலவன்ஸ்கள் மாகாணகவர்ன்மெண்டார் செய்யும் விதிகளின்படி கொடுக்கப்படும்: சம்பளம் வேண்டியதில்லை யென்பவர்களும். சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள இஷ்டப்படுகிறவர்களும் எழுத்துமூலம் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

### பொதுக்கல்வி சிபார்சுகள்

ஆரம்ப (குழந்தை) வகுப்புகளுக்குத்தக்க பயிற்சியுள்ள உபாத்தியாயினிகள் நியமிக்கப்படவேண்டும். இதற்கு ஸ்திரீகள்தான் அவசியம். சிறுவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் அவரவர்களது இயற்கை குணங்களுக்கேற்ற பாடம்போதிக்கப்படவேண்டும்; வெறும்புஸ்தகப் படிப்புபோதாது உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் தாய் பாஷையில்தான் பாடம் நடக்க வேண்டும். ஆனால் எல்லா மாணவர்களும் ஆங்கில பாஷையிலும் கட்டாயமாகப் பயிற்சி பெறவேண்டும். பள்ளிக்கூட வேலைத்திட்டத்தில் பிள்ளைகள் வேலை செய்வதும் வற்புறுத்தப்படவேண்டும். நற்கலைகளைப் போதிப்பதிலும் நோக்கம் அதிக மிருக்கவேண்டும் சிறுபிள்ளைகளுக்கு தேகப்பயிற்சி மட்டுமே அளிப்பது போதாது; அவர்கள் மனோல்லாஸப்படி விளையாட அனுமதிக்கப்படவேண்டும்.

வித்யா இலாகா நிர்வாக விஷயமாக அதிகாரிகள் அவ்வப்போது தப்பிதங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கவர்ன்மெண்டாருக்கு முக்கிய உரிமைகள் கிட்டவேண்டும். வித்யா இலாகா தலைவர் தமது வேலையைச் சரியாக நடத்தவேண்டியதை யுத்தேசித்து அவர் அப்பதவியில் அதிககாலம் வைக்கப்படவேண்டும். பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களுக்கு தக்க வசதிகள் வழங்கப்படவேண்டும். வெளிநாடுகளுக்குப் போய் அங்குள்ள கல்வி முறைகளைக் கவனிப்பதற்கு இன்ஸ்பெக்டர்களும் மற்றும் இதர உபாத்தியாயர்களும், பணமிருந்தால் அனுப்பப்படவேண்டும்.

மிஸ்டர் ஏ. அப்பாட்
தொழிற் கல்வி நிபுணர்.

### பாதூரி வயலில் புதையல்

1-8-37-ல் திருக்கோயிலூர் கிராமத்தில் ஸ்ரீமான் பார்த்தசாரதி அய்யங்கார் நெல் களத்தில் நெல் காய வைக்க ஆதிதிராவிட பெண்ணை விட்டு களத்தைத் துடைப்பதால் பெருக்கச் சொல்ல அவள் ஏதோ ஒரு ராக் கொடிமாதிரி தெரிகிறதே யென்றாள். பக்கத்திலிருந்த ஒருவர் ஸ்ரீமான் பார்த்தசாரதி அய்யங்கார் கையிலிருந்த கழியைக்கொண்டு தோண்டிப் பார்த்ததில் வாய் மூடிய பித்தளைச் செம்பு இருந்தது. அதை எடுத்துப் பார்த்ததில் அதில் சிறிய தங்க நாணயங்கள் 312, அதைவிட கொஞ்சம்பெரிய நாணயம் ஒன்று. சதுர தங்க நாணயங்கள் 2 இருந்தன. சதுர நாணயத்தில் மாத்திரம் அசோக சக்ரவர்த்தி உருவம் காணப்பட்டது. இதிலிருந்து பார்க்கப்போனால் அக்காலத்தில் செலாவணி ஆன நாணயங்கள் என்று சொல்லப்படுகின்றது. இது சங்கதியை உடனே உளுந்தூர்பேட்டை டிப்டி தாசில்தாருக்குத் தெரிவிக்க அவர் நேரில்போய் ஸ்தலத்தைப் பார்வையிட்டு நாணயங்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டதாகத் தெரிகிறது.

### தொழிற் கல்வியைப் போதிக்க வேண்டிய முறை

"நமது கல்வித் திட்டத்தை நாம் மாற்ற வேண்டியது தான்; ஆனால் பெருத்த மாறுதல்களைச் செய்யுமுன்னர் தீர்க்கமாகவும், ஆழ்ந்தும் யோசிக்கவேண்டும் இப்பொழுது உத்தேசிக்கப் பட்டுள்ள மாறுதல்களின் பின்னர் இத்தகைய யோசனை இருப்பதாக எனக்குத்தெரியவில்லை. மாறுதல் சம்பந்தமாக எத்தகைய கமிட்டியோ அல்லது கமிஷனோ ஏற்படினும் அதில் பொதுமக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய பிரதிநிதிகள் இருக்கவேண்டும் இவர்கள் வரிசெலுத்துபவர்களின் பணத்திற்குச் சரியான பாதுகாப்பாளராக விருக்கவேண்டும் இப்பொழுது அதிகாரத்திற்கு வந்திருக்கும் காங்கிரஸ் கவர்ன்மெண்டு நாலுபக்கங்களிலிருந்தும் அபிப் பிராயங்களையும் யோசனைகளையும் திரட்டுவதன் விவேகத்தை உணருமென்றும் பிறகே இறுதியான மாறுதலுக்கு முடிவு செய்யு மென்றும் நம்புகிறேன்."

ஸ்ரீ சாஸ்த்திரி

### கல்விச் சீர்திருத்தம்.

கல்விச் சீர்திருத்த விஷயமாக பொது மக்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளவும், கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள பிரமுகர்களின் கருத்துக்களை யறியவும் இம்மாகாணத்திலுள்ள குறிப்பிட்ட சில இடங்களில் மகாநாடுகளில் கல்வி மந்திரியாலும் அவர் காரியதரிசியாலும் கூட்டப்படும். இம்மகாநாடுகளில் கலந்துகொள்ளுமாறு அந்த ஜில்லா போர்டு தலைவர், முனிசிபல் சபைத்தலைவர், ஜில்லா கல்விச்சபைத்தலைவர், ஜில்லா போர்ட்டு முனிசிபாலிடி கல்வி அதிகாரிகள் ஆரம்பப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள் முதலியவர்கள் அழைக்கப்படுவர். தவிர அந்தந்த ஜில்லா சட்டசபை அங்கத்தினரும் அழைக்கப்படுவார். கூடிய சீக்கிரத்தில் கல்வி மந்திரியும் அவரது காரியதரிசியும் கோயமுத்தூர், மலையாள ஜில்லாக்களுக்கு சுற்றுப் பிரயாணம் செல்லுவர்.

(விளம்பர இலாகா மந்திரி)

### தஞ்சை ஜில்லாக் கல்விச்சபை

இம்மாகாணத்தின் உயர்தர கல்வி கீழ்த்தரக் கல்வி சீர்திருத்த விஷயமாக சமீபத்தில் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையை தஞ்சை ஜில்லா கல்விச் சபையால் நியமனம் செய்யப்பட்ட ஓர் விசேஷ கமிட்டி நேற்று ஸ்ரீமான் ராமலிங்கசாமி தலைமையில் கூடி பரிசிலனைசெய்து ஜில்லா கல்விச்சபைகளை அடியோடு ஒழிப்பதை நிறுத்திவிட வேண்டுமாகவும், மேற்படி சபைக்கு உண்மையான அதிகாரங்களைக் கொடுத்து ஒழுங்கானமுறையில் கீழ்த்தரக் கல்வியை நடத்தும்படியான சக்தியை மேற்படி சபைக்கு அளிக்க வேண்டுமாகவும், மேற்படி அறிக்கையில் கண்ட யோசனைகளைக் கவனித்து ஓர் முடிவுக்கு வர கல்வி நிபுணர்களடங்கிய ஓர் கமிட்டியை நியமனம் செய்யுமாறு தீர்மானங்கள் நிறைவேறின.



### கதருடையில் சீப் ஸெகரடரி

சென்னை சர்க்கார் சீப் ஸெகரடரியான மிஸ்டர் ஸி. எப். பிராக்கன்பரி ஐ. ஸி. எஸ். பூரணமாகக் கதருடை தரித்து செகரடரியேட்டுக்கு வருகிறார். அவர் இன்னும் பல ஜதை கதர் ஆடைகள் தயாரிப்பதாகத் தெரிகிறது.

### சுகாதாரக் கல்வி

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கு சுகாதாரக் கல்வியைக் கட்டாய பாடமாக வைத்துப்போதிக்க மந்திரி சபையார் ஏற்பாடுசெய்து வருகின்றனர். ஆசிரியர்களும் சுகாதார விஷயங்களைக் கற்கவேண்டுமென்பது மந்திரி சபையின் விருப்பம். எனவே ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிக்கூடங்களிலும் இப்போது கட்டாயமாக வைக்கப்படும்.

### ராணுவ செலவில் குறைவு.

"ராணுவச் செலவில் பெரும்பாகத்தைக் குறைத்து, மாகாணகவர்ன்மெண்டுகள் புதிய மாறுதல்களை யுண்டுபண்ண அந்தப்பணத்தை மத்தியகவர்ன்மெண்டு அவற்றிற்கு அளிக்குமாறு இங்கிலாந்து செய்தாலல்லது மாகாண காங்கிரஸ மந்திரிகளுக்கு இங்கிலாந்து நேர்மையான இடமளித்ததாகக் கூறுவதற்கில்லை. ராணுவச் செலவைப்பற்றிய பழைய கூக்குரலையே இப்படித் திரும்பநான் கூறுவதாக நினைக்கக்கூடாது. நிர்வாகத்தில் இது உடனே செய்யவேண்டியதாக அவசியமாக விருக்கிறதென்பதை நான் வற்புறுத்துகிறேன். நிர்வாகச் செலவுக்குத் தகுந்த குறை வுண்டுபண்ணுவதை அனுமதித்தாகவேண்டும். அத்துடன் ராணுவப்பளுவைக் குறைக்க வேண்டும். இதில் கிடைக்கும் செல்வத்தை மாகாணங்களுக்கு அளித்தாகவேண்டும்."

ஸி. ராஜகோபாலாச்சாரியார்.

### ஜமீன்தாரி முறை ஒழிய

ஜமீன்தாரி முறையை ஒழித்து ஜமீன் குடிகளைக் கவர்ன்மெண்டுக்குட்பட்ட பட்டாதாரிகளாக மாற்றி, ஜமீன்கள் கவர்ன்மெண்டுக்குச் சேர்ந்து விடுவதாம் ஜமீன்தார்களுக்கு ஜமீனின் நிகர வருமானத்தில் 20 பங்குக்கு மேற்படாமல் நஷ்ட ஈடாகக் கொடுப்பதென்றும், இத்தொகையை நிர்ணயிப்பதற்காக ஜில்லா ஜட்ஜ், கலெக்டர் உள்பட கமிஷன் ஒன்றை நியமிப்பதென்றும், தர்மபுரியைச் சேர்ந்த ஸ்ரீமான் எம் ஜி. நடேசசெட்டியார் (M.L.A.) ஒரு மசோதாவைக் கொண்டுவரப் போவதாக அறிவித்திருக்கிறார்.

### முத்தங் கொடுப்பதே மருந்து

ஒரு பர்மா பத்திரிகை பர்மாவின் வடக்குஷான் பிரதேசங்களில் காணப்படும் அபூர்வமான வியாதிக்கு முத்தமிடுவதுதான் மருந்து என்று குறிப்பிட்டிருக்கிறது.

ஜ்வரம், பசியின்மை, மனச்சோர்வு ஆகியவை இவ்வியாதியின் அம்சங்கள். வியாதியஸ்தரை முத்தமிடுவதனால் தான் சொஸ்தம் ஏற்படுகிறது. உறவினரைத் தவிர இதரர்கள் தான் முத்தமிடவேண்டும். புருஷனாக விருந்தால் ஸ்திரீகளும், ஸ்திரீகளுக்குப் புருஷர்களும் முத்தம் கொடுக்கவேண்டுமாம்.

### தேசிய கீதத்திற்கு போலீஸ் மரியாதை

மத்திய மாகாண கவர்ன்மெண்டார் இம்மாகாண மெங்குமுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு ரகசியமான சுற்று அறிக்கை ஒன்று அனுப்பியிருப்பதாகவும் அதில் அவர்கள் தேசிய கீதங்களுக்குத் தகுந்த மரியாதை காட்ட வேண்டுமெனக் கேட்டிருப்பதாகவும் தெரிகிறது. பொது வைபவங்களில் தேசிய கீதங்கள் பாடப்படும்போது போலீசார் எழுந்து நிற்கவேண்டுமென்று இந்த சுற்றறிக்கை சிபார்சு செய்வதாகத் தெரிகிறது.

---

சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாக வேலையை இழந்த கிராம அதிகாரிகளை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும் விஷயத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் யோசித்து வருகிறார்கள். இது சம்பந்தமான பூரா விவரங்களையும் சேகரிக்க ஏற்பாடாகி யிருக்கிறது.

190349

# உயர்தரக் கல்வி

நாட்டில் உயர்தரக்கல்வி நாளுக்கு நாள் 'உயர்ந்து' போவது உண்மை. அதற்கேற்ற பயன் ஏதாயினும் உண்டா? அதுதான் சூந்யம்.

கல்வி வளர வளர நாடு முன்னேற்ற மடைதல் வேண்டுமன்றோ? நமது நாட்டின் தற்காலக் கல்விநிலை அதற்கு முற்றும் மாறாக நிற்கிறது; தொல்லையுஞ் விளைத்து வருகிறது. காரணம் என்ன? உயர்தரக் கல்வி முழுவதும் பிறநாட்டு முறையில் உரிமை யுணர்வுக்கு இடம் ஏது?

உயர்தரக் கல்வி தற்போது எந்நோக்கத்துடன் பயிலப்படுகிறது? உத்தியோக நோக்குடன் என்று சொல்ல வேண்டுவதில்லை. படித்தவர் அனைவரும் உத்தியோகத்தில் நுழைய விரும்பினுல், உத்தியோக பீடங்கள் மேலும் மேலும் பெருகிக் கொண்டே போதல் வேண்டும். அப்பீடங்கள் எவ்வளவு பெருகும்? எப்படி பெருகும்? வேலையில்லாத் திண்டாட்டமே பெருகுகிறது.

தற்கால உயர்தரக் கல்வியால் நாட்டுக்கு விளையுங் கேடுகள் பல; பல திறத்தன. முதலாவது கல்லூரிப் பாடபுத்தகங்களும், விளையாட்டுக் கருவிகளும், பிறவும் எந்நாட்டின என்பதை நேயர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக.

பிறநாட்டார் எழுதியதை நெட்டுருச்செய்து பரீட்சையில் தேர்ச்சியடைவதால், இயற்கை அறிவு வளர்ச்சிக்கு இடமில்லாமற் போகிறது. பட்டதாரிகள் கண்ணிலோ கருத்திலோ நாட்டுக் கலைகள் படுவதேயில்லை. அவர்கள் நெஞ்சம் நாட்டு மயமாயிருப்பதில்லை. நாட்டுக் கணிதம், நாட்டுச் சிற்பம், நாட்டுச் சோதிடம், நாட்டு வைத்தியம், நாட்டுத் தத்துவம், நாட்டுக் காவியம் முதலியன எப்படி வளரும்? இந்நாளில் அவைகள் எள்ளளவும் படுகின்றன. என் செய்வது?

பட்டதாரிகள் பதவிகளிற் புகுந்து பெருஞ் சம்பளம் பெறுகிறார்கள். பெருஞ் சம்பளங் கொண்டு அவர்கள் என் செய்கிறார்கள்? பிறநாட்டுப் பொருள்களை அவர்கள் ஏராளமாக வரவழைக்கிறார்கள். பிற நாட்டுப் பொருளின்றிச் சகோதரர்களால் வாழ்தல் இயலவில்லை. ஒரு பெரிய உத்தியோகஸ்தர் வீட்டில் நுழைந்து சோதனை செய்தால், அவர்தம் வருவாய் முழுவதையும் பிறநாட்டுப் பொருட் பூதங்கள் விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருத்தலைக் காணலாம். நாட்டுச் செல்வம் சுரண்டப்படுதற்கு உயர்தரக் கல்வி துணையாக நிற்கிறது.

தற்கால உயர்தரக் கல்வியால் நல்லொழுக்கமாதல் மக்களிடை மலர்ந்து நிற்கிறதா? பிறர்க்காகத் தான் வாழ்தல் வேண்டுமென்பது நமது நாட்டு அறம். தற்காலக் கல்வி அப்போறத்தைத் தலைகீழாக மாற்றிவிட்டது. சுருட்டு, சிகரெட்டு, பீடி, சாராயம் முதலியவற்றைக் குடித்தல் தற்காலக் கல்வியுடன் வளர்ந்து வருதல் கண்கூடு. வேறு வித தீயொழுக்கங்களும் பரவி வருகின்றன. கற்பு என்பது அகராதியளவில் நிற்கும் நிலை; நேருமோ என்னவோ தெரியவில்லை. தற்கால கல்வியரசி புரியுந் திருவிளையாடல்கள் பலப்பல. விரிவுரை வேண்டுவதில்லை.

உயர்தரக்கல்வி வேண்டாமா என்று சிலர் கேட்கலாம். உயர்தரக்கல்வி வேண்டாமென்று நாம் கூறுகிறோமில்லை. உயர்தரக் கல்வி முறை மாறுதல் வேண்டு மென்பது நமது கருத்து. உயர்தரக்கல்வி நாட்டின் நலத்துக்கு உரியதாய், இயற்கை யறிவை வளர்ப்பதாய், புதுமைக்கலைகளைக் காண்பதற்குத் துணைபுரிவதாய், நல்லொழுக்கத்தை எழுப்புவதா யிருத்தல் வேண்டும். இவைகளைப் பெறுதற்கு எம்முறையைக்கடைப் பிடிப்பது என்னுஞ் சிந்தனை நாட்டில் அறிஞரிடைத் தோன்றிய வண்ணமா யிருக்கிறது. அறிஞர் தத்தங் கருத்துக்களை வெளியிடுதல் நலம். அவை கல்வி மந்திரிக்குத் துணை செய்யும்.

போதனு முறை மாறுதல் வேண்டும். தாய் மொழியில் பாடங்கள் போதிக்கப் பெறுதல் நல்லது. அஃது இயற்கையின் போக்குக்கு அரண்செய்வதாகும். தாய் மொழியில் பல துறைப் பாட புத்தகங்களைத் திரட்டல் வேண்டும். இதற்கென ஒரு கூட்டத்தை அமைத்தால், அது விரைவில் புத்தகங்களைச் சித்தஞ் செய்யும்.



உயர்தரக் கல்விப் பெயரால் தற்போதுள்ள பரீட்சை முறைப் பிள்ளைகளைக் கொல்லும் யமனாக உருமிக்கொண்டிருக்கிறது. உயர்தரக் கல்விக்குப் பரீட்சையே அநாவசியம். குறிப்பிட்ட ஒரு கீழ் வகுப்பில் ஒரு முறை பரீட்சை வைத்துக் கொள்ளலாம். அதில் தேறுகிறவர்களை உயர்தரக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளலாம்.

'உயர்தரக் கல்வி உத்தியோகத்துக்கு' என்னும் எண்ணம் நாட்டைவிட்டு அகலல் வேண்டும். தற்கால ஆட்சிமுறை சாம்ராஜ்ய முறையை அடிப்படையாகக் கொண்டதாதலின், அதற்கு உத்தியோகஸ்தர் தொகை அதிகம் தேவை. கிராமங்கள் கிராமத்தார் வழி நடைபெறுங் காலத்தில் உத்தியோகஸ்தர் பலர் வேண்டுவதில்லை. தொழில் முறைகளைப் பெருக்குவதில் கிராமங்கள் கண்ணுங் கருத்துமா யிருக்கும்.

நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு உயர்தரக் கல்வியாளர் துணை தேவை. தற்கால முறையில் விவசாயம், நெய்தல் முதலியவற்றை அபிவிருத்தி செய்ய விஞ்ஞானக்கலை ஆராய்ச்சி இன்றியமையாதது. ஜப்பானும், ருஷ்யாவும் விஞ்ஞானக் கலைகளின் வழியே தொழில்களைப் பெருக்கி வருதல் கண்ணு யிருக்கிறது. அவ்வழியில் நம் நாட்டார் ஏன் தொழில்களை வளர்த்தல்கூடாது? தற்காலக் கல்லூரிப் பட்டப் படிப்பு அதற்கு உதவாது.

நாட்டில் தற்கால முறையில் தொழில்கள் வளம் பெறும் நிலை நேர்ந்தால் பலர் உயர்தரப் படிப்புக் கவலையை ஒழிப்பர். கூர்ந்தமதியுடைய சிலரே உயர்தரக் கல்வி பயில முற்படுவர். அவர் தங் கல்வியும் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படும். மிகச் சிலரே உத்தியோகஸ்தராக வருவர். அவரும் தம்மை அதிகாரிகள் என்று நினையார்; தேச ஊழியரென்றே கருதித் தொண்டு செய்வர்.

நாட்டுத் தொழில்கள் பெருகப் பெருகப் போலீசார் தொகையும் சிப்பாய்கள் தொகையும் குறையும். அந்நிய ஆட்சி முறையுள்ளவரை அத்தொகை குறையாது. அதுபற்றியே சுய ஆட்சி வேண்டப்படுகிறது. சுய ஆட்சிக்கு வழி தேடவே தற்போது காங்கரஸ் சார்பில் மந்திரி பதவி ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போதைய மந்திரிகள் முன்னணி வேலை செய்ய முனைந்து நிற்கிறார்கள். அவர்கட்கு மகாத்மா காந்தி வழி காட்டி வருகிறார்.

மந்திரிமார் தொழிலபிவிருத்தியில் கண்ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும். அதற்கு ஆக்கந்தேடத் தற்காலக்கல்வி முறையை மாற்றியே தீர்தல் வேண்டும். கல்வி மந்திரிக்குள்ள கடமை பெரிது. அதற்குப் பொதுமக்கள் துணை தேவை.

இந்நாளில் பல்திறக் கல்லூரிகளிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை நன்முறையில் பெருகச் செய்யலாம்; சிலவற்றை அருகச்செய்யலாம். விவசாயக் கல்லூரிபோன்றனவற்றைப் பெருகச் செய்தல் நல்லது. சட்டக் கல்லூரி போன்றனவற்றை அருகச் செய்தல் நல்லது. சட்டக் கல்லூரியால் பல அறிஞர் உழைப்பு வேறு வழியில் செல்கிறது. அவர் தம் அறிவு உழைப்பு நாட்டுத் தொழில் முறைகட்கென்று பயன் பட்டால் எவ்வளவோ நலம் விளையும்.

தேசத்தின் பொருட்டு மாணக்கர்கள், 'சட்டக் கல்லூரியில் சேர்வதில்லை' என்று உறுதிகொள்ளுதல் சிறப்பு. அப்பொழுதே பெரும் பெரும் கல்விச் சாலைகளெல்லாம் தொழிற் சாலைகளாக மாறும்.

வரப்போவது சுய ஆட்சி. சுய ஆட்சி காலத்தில் பல துறைகள் மாறும். அம்மாறுதலில் தற்காலக் கல்வி முறை சிறிதும் பயன்தாராது. ஆதலால் பெற்றோர்கள் பிள்ளைகளைத் தற்காலக் கல்விக்கு இரையாக்கா திருப்பார்களாக. பிள்ளைகளின் பிற்கால வாழ்வுக்கெனக் காங்கரஸ் மந்திரிமார் தக்க வழியைக் கல்வித்துறையில் கோலுவாராக.

'நவ சக்தி'

193349

# Fort St. George Gazette

**JULY 1937.**

CONFIRMATION.

No. 279.—Miss P. Seethammal, Officiating Lecturer, Queen Mary's College for Women, Madras, to be Lecturer in English in the Madras Educational Service in the same College with effect from the 20th March 1936.

APPOINTMENTS.

No. 285.—M. R. Ry. S. Balakrishna Ayyar, Lecturer and officiating Vice-principal, Teachers' College, Saidapet, to be Vice-Principal in the same College.

No. 296.—M.R.Ry. K. C. Viraraghava Ayyar, Assistant Lecturer, Government College, Kumbakonam, and officiating Lecturer, Teachers' College, Saidapet, to be Lecturer, Teachers' College, Saidapet.

No. 291.—M.R.Ry. M. Suryanarayana Garu, Assistant Lecturer, Government Arts College, Rajahmundry, and officiating District Educational Officer, Vizagapatam, to be Lecturer in English, Government Arts College, Rajahmundry, without prejudice to his officiating appointment.

No. 303.—Miss E. Lazarus, Headmistress, Secondary section, Lady Willingdon Training College, Madras. to act as Kindergarten Lecturer in the same College.

---

# S. S. L. C. Board.

APPOINTMENTS.

The Government are pleased to appoint the following persons to be members of the Board for the award of Secondary School-Leaving Certificates for a period of three years from the 15th July 1937:—

Mr. N. R. Krishnamma, Principal, Teachers' College, Saidapet,

Miss. E. Lazarus, Headmistress, Lady Willingdon Training College School, Madras.

Mr. R. M. Savur, Divisional Inspector of Schools, Guntur.

M. R. Ry. K. Kuruvilla Jacob Avargal, Headmaster, Madras Christian College School, Madras.

M. R. Ry. A. V. Kutti Krishna Menon Avargal, Principal, Zamorin's College, Calicut.

M. R. Ry. A. M. Varki Avargal. Principal, Union Christian College, Alwaye.

M. R. Ry. S. Parthasarathi Nayadu Garu, Vice-Principal, Mrs. A. V. N. College Vizagapatam.

M. R. Ry. C. Bhanumurthi Garu, Headmaster, Board High School, Repalle.

Dr. B. V. Narayanaswami Nayudu, Professor Economics, Annamalai University

The Rev. Father A. Anderson, S. C., Headmaster, St. Gabriels High School, Madras.

Mr. E. D. Martin, Headmaster, Wardlaw, High School, Bellary.

M. R. Ry. N. Viswanatha Ayyar Avargal, Registrar Annamalai University.

---

# Monthly Return Appendix 33.

புதிய ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்தத்தின் 5-வது பிரிவின்படி பிரதி மாதமும் ஒவ்வொரு பாடசாலையும் மாதாந்திர ரிபோர்ட்டு 15-ந் தேதிக்குள்ளடிப்படி இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்ப வேண்டும். பிரதி மாதமும் எழுதி யனுப்ப சிரமம் இல்லாமல், ஆங்கிலத்திலும், தமிழிலும் கலந்து பாரங்கள் (Monthly return Forms) அச்சிடப்பட்டிருக்கின்றன. 4 அணு தபால் பில்லைகளை (Postal Stams) காலணு பில்லைகளாக அனுப்பினுல் 24 பாரங்களும் உடனே தபாலில் அனுப்பிக்கப்படும்.

மானேஜர்
"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"
94-95, புதுத்தெரு மண்ணடி, மதறாஸ்.

# உலகப்போக்கு

மத்திய ஆஸ்ட்ரேலியாவில் தண்ணீர் கிடைப்பது அவ்வளவு கஷ்டமாம். இதன் பயனுக அங்கு வசித்துவரும் ஒருவகைச் சமூகத்தினர் நாட்கணக்கில் தண்ணீரோ மற்றெதுவோ குடிக்காமலே பிரயாணம் செய்யக்கூடியவாறு தங்களைப் பழக்கி வைத்துக்கொண்டிருக்கின்றனராம்.

*    *    *

மலைகளில் வளரும் செம் புளிச்சை மரத்தின் கொம்பை வெட்டி அதன் நுனியில் கொளுத்தினுல் அதில் மெழுகு வத்தியைப் போல நெடுநேரம் எரிந்துகொண்டிருக்குமாம். நாட்டுப்புற வாசிகள் இராக்காலங்களில் இந்தக் கொம்பைத்தான் உபயோகிக்கிறுர்களாம். ஹரிக்கேன் விளக்குபோல இது பயன்படுமாம்.

*    *    *

ஹாலண்டு தேச மக்கள் சமுத்திரத்தைச் சிறிது சிறிதாக வற்றச் செய்து விட்டார்கள். அதனுல் சுமார் 5,50,000 ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய நிலமாகி விட்டது.

*    *    *

## பறவைகளின் கதி

பறவைகளுள் மிக வேகமாய்ப் பறக்கக் கூடியது தூக்கணங் குருவியே என்று கூறப்படுகிறது. அது சில சமயங்களில் மணிக்கு 786 மைல் வேகத்தில் பறக்கிறதாம். காட்டு வாத்து மணிக்கு தொண்ணூற்று மூன்று மைலும் "ஸ்டாலிங்" என்ற பட்சி 45 மைலும் காக்கை முதலியன நாற்பத்து மூன்று மைலும், கடலிலேயே வசிக்கும் ஒரு பட்சி மணிக்கு முப்பத்தோரு மைல் வீதமும் பறக்கின்றன.

*    *    *

## கல்லாய் மாறும் மனிதன்

பிரேக் முனிசிபல் ஆஸ்பத்திரியில் ஒரு மனிதன் சேர்க்கப்பட்டிருக்கிறுன். அவனுக்கு 1914ல் மணிக்கட்டில் ஒரு வகை வலி ஏற்பட்டு அந்த கை பூராவுமே கல் போல் இறுகி வளைக்க முடியாமல் போய் விட்டது. பின்னர் இன்னொரு கை, கழுத்து, முதுகு, கால்கள், பாதம் முதலியனவும் அவ்வாறே கல்லாகப் போய்விட்டன. 1925-லிருந்து அவன் குத்திரனைப்போல் உயிர் வாழ்ந்து வருகிறுன். சுவைக்குரிய தோற்றமே யில்லை. மூச்சு வருகிறதேயொழிய மார்பு விம்மவில்லை.

## செயற்கை மாமிசம்

வியன்னுவில் ஒருவர் செயற்கை மாமிசம் உண்டுபண்ணிவருகிருராம், இது மாமிசம் போல ருசியா யிருக்கிறது. ஆனுல், மாமிசம் அல்ல. மாமிசத்திற்குரிய கேடுமில்லை. கோதுமையாலும் வேறு மாவுகளாலும் இதனைச் செய்கிறுர்கள். இந்தச் சைவ மாமிசத்தைச் சாப்பிட்டால் மிருக மாமிசத்தை சாப்பிடுவதால் வரும் நோய்கள் வராவென்று ஒரு பெரிய வைத்தியர் சொல்லுகிறுர், இது சகாயமா யிருக்கிறதாம்.

*    *    *

## ஐரோப்பியர் தீ மிதிக்கிறுர்

நம்நாட்டில் தீ மிதிக்கும் வழக்கம் இருக்கிறதே! அதைச் சிலர் பரிகசித்து வந்தனர். ஐரோப்பியரும் தீ மிதிக்கிறுர். பல்கேரியாவில் வல்கரி என்று ஒரு பட்டணமிருக்கிறது. அங்கே ஒரு ஜாதியினர் ஓர் உற்சவ நாளன்று தீ மிதித்தனர். சாயங்காலம் ஒரு பெரிய குழி வெட்டிக் கட்டைகளை அடுக்கி நெருப்பு மூட்டி விடுகிறுர்கள். கடவுளைத் தொழுதபின் அங்குள்ள வயதான கிழவிகள் ஒருவர்பின் ஒருவராக அந்தத் தீயை மிதிக்கிறுர்கள்! முகத்தில் சிறிது வாட்டம் தோன்றினுலும் அவர்கள் காலில் கொப்புளமே இல்லை.

*    *    *

## அறிவுள்ள நாய்

பிரிட்டிஷ் கொலம்பியாவில் ரிச்சர்டு டேவிட்ஸன் என்பவர் ஒரு நாய் வளர்க்கிறுர். டியூக் என்பது அந்த நாயின் பெயர். அதற்கு வயது மூன்று. அது சீட்டு விளையாடுகிறது. 300 விதமான சாமான்களின் பெயர் அதற்குத் தெரியும். அதன் எஜமானர் ஒரு சீட்டின் பெயரைச் சொல்லி எடுக்கச் சொல்கிறுர் உடனே அது தவறுமல் அதை எடுக்கிறது; ராஜாவை வெட்டுவதற்கு ஒரு சீட்டு எடு என்றுர் அவர். உடனே அதற்கு வேண்டிய சீட்டை நாய் எடுக்கிறது. இரவு ஆனதும் அந்த நாய் தன் எஜமானரின் பூட்சைக் கொண்டுபோய் வைத்துவிட்டுச் செருப்பைக் கொண்டுவந்து கொடுக்கிறது.

40 மாத்திரைகள் அடங்கிய



டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## நவ யௌவனம் வேண்டின்.

உலகப்பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும்
தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

## மதனமஞ்சரியை

உபயோகியுங்கள்.

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல் ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும்.

இன்றும் கேட்லாக். இனாம்!

ஒருமணி நேரத்தில் வாலிபம்

### ரமணா விலாசினி



இரவில் ஒரு மாத்திரை படுக்கைக்குச் செல்லும் ஒருமணி நேரத்துக்குமுன் சாப்பிடுவதால் இஷ்டப்படி வீரிய ஸ்தம்பனம் உண்டாகின்றது.

ஒரு டப்பி விலை ரூ. 1—0—0

மதன மஞ்சரி பார்மஸி.
22, சைனபஜார் ரோட்,
மதராஸ்.



ஒன்று முதல் 5-வது வகுப்புக்களுக்குப்
பாடபுத்தகங்களாக வைக்கத் தகுந்தவை

## மணி வாசகம்

நூதன முறையில் ஆரம்ப பாடசாலைகளைப் பார்வையிடும் அனுபவ மிகுந்த ஆசிரியர்களால் தயாரிக்கப் பெற்றவை. பல சித்திரப் படங்கள் கொண்டவை படங்களின் அளவும் தன்மையும் நடையின் நேர்மையும் தெளிவும் இவ்வாசக வரிசையின் பெயருக்கு ஏற்றவாறே அமைந்துள்ளன.

| | அ. | பை. |
|---|---|---|
| முதல் புத்தகம் | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| மூன்றும் ,, | 4 | 0 |
| நான்காம் ,, | 5 | 0 |
| ஐந்தாம் ,, | 6 | 0 |

## பாலர் கணிதம்

முத்தியாலுபேட்டை
உயர்தர கலாசாலை பிரதம ஆசிரியர்
கே. எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார்
B. A., L. T.
இயற்றியது.

முதல் புத்தகம் 3-வது வகுப்புக் குரியது. 6 அணா
இரண்டாம் புத்தகம் 5-வது வகுப்புக் குரியது. 7 அணா
மூன்றும் புத்தகம் 4-வது வகுப்புக் குரியது. 8 அணா

(இப்புத்தகங்களுக்குத் தெலுங்கு பிரதிகளுண்டு.)

இவை அரசாங்க அங்கீகாரம் பெற்றவை.

### ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,

53-56, பவழக்காரத் தெரு, சென்னை.



Printed in the Association Press, & Published by P. Veeraraghavan,
94/95 New Street, G. T. Madras.



# Venkatrama & Co

### வெங்கடராம நீதிகதா வாசகம்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் பாகம் | ...0—1—6 | நான்காம் பாகம் | ...0—1—6 |
| மூன்றும் பாகம் | ...0—1—6 | சித்ரபால சிக்ஷை | ...0—3—0 |

### வெங்கடராம தமிழ் வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | ...0 2 0 | நான்காம் வகுப்பு | ...0 4 0 |
| இரண்டாம் ,, | ...0 3 0 | ஐந்தாம் ,, | ...0 4 6 |
| மூன்றும் ,, | ...0 3 0 | | |

## POETICAL SELECTIONS

(Approved by the ext Book Committee).

| | | | | |
|---|---|---|---|---|
| FIRST BOOK | For I Form | 0—3—0 | THIRD BOOK III Form | 0—4—0 |
| SECOND ,, | II ,, | 0—3—0 | VENKATARAM'S 1st Primer | 0—2—0 |

நெ. 4, கார்பொரேஷன், பழக்கடை, சைனபஜார், மதராஸ்.



# அகில இந்தியா

## ஆசிரியர்கள் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்

### சென்னை.

ஆசிரியர்களால், ஆசிரியர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது.

உங்கள் வயோதிகத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நீங்கள் என்ன சேமித்து வைத்திருக்கிறீர்கள்?

உடனே ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் எழுதவும்.

தலைமை ஆபீஸ்:—

94/95, புதுத்தெரு, மண்ணடி, ஜி. டி. மதராஸ்.

Registered No. M 3671.


# "ARAMBA BOTHINI"

A High Class Tamil Monthly

## Good and Healthy Reading

FOR SCHOOL CHILDREN AND **RURAL** READERS
EDUCATIONAL, INSTRUCTIVE, ENTERTAINING. CHARACTER BUILDING

## TEACHERS & PARENTS

SHOULD ENCOURAGE READING THIS VERY USEFUL AND HEALTHY MONTHLY.

FREE FROM IMMORAL STORIES & ADVERTISEMENTS AND CINEMA PICTURES.

**ANNUAL SUBSCRIPTION 9 As. 2 COPIES Re. 1.**

*ARAMBA BOTHINI OFFICE, DASARPURAM, TINNANUR R.S.*

---


# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்.

**1.** **'கக்வா'** கக்குவானுக்கு மிகவும் கைகண்டது; ரிஜிஸ்டர்செய்யப்பட்டது. இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப் பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். ... புட்டி ரூ 1.
3 புட்டி வாங்கினல் தபால் சார்ஜ் இனம்.

**2.** க்லோரோ சாலின் இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதே கிடையாது, அபூர்வமான, மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா, பேதி, வயிற்றுநோய் இவைகள் விரைவில் நீங்கும். புட்டி ரூபா 1 2 0

**3.** என்றுந் தைலம். ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகலவித கண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உறுப்புகளிலுள்ள மேகச்சூடு நீங்கும்.
புட்டி விலை ரூபா 1 4 0

மருந்து காட்லாக் இனம்.



வாத்தியார்களுக்கும் வைத்தியர்களுக்கு மாத்திரம் ரூ 5 மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினல் ரூ 1 தள்ளி கொடுக்கப்படும்.

ஆஸ்துமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

Dr. H. தேவதாசர் B.A., L.T., M.T.Sc.,
தாசர் சித்த வைத்தியசாலை,
தின்னனூர், R.S.